# Summaries in Tamil

**ஆப்கானிய ஆசிரியர்களின் கலாசாரத்திற்குப் பொருத்தமான உளசமூகப் பயிற்சியை வழங்கல்**

*Patricia A. Omidian*

30 வருடங்களுக்கும் மேலான முடிவற்ற யுத்தமொன்றை ஆப்கானிஸ்தான் முகம் கொடுத்தது. மிகவும் குறைவான ஆப்கானியர்களே யுத்தத்திற்கு முன்னர் வாழ்வு எப்படி இருந்தது என நினைவுவைத்திருக்கின்றனர். சமாதானம், மீழ் இணக்கப்பாடு என்பவற்றை வளர்க்கவென, யுத்த மனவடுக்களைக் குறைக்க என வடிவமைக்கப்படும் திட்டங்களுக்கு இது ஒரு பிரச்சினையாக இருந்தது. இந்தக் கட்டுரை எவ்வாறு உள்நாட்டு கலாசாரங்களின் அடிப்படையில் நேரான பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் உபாயங்களை ஊக்கப்படுத்தும் செயற்திட்டம் அமைக்கப்பட்டது என்று கூறுகிறது. 2002 ம் ஆண்டு, கட்டுரையாளர், சர்வதேச மீட்புக் குழுவின் பெண்கள் கல்வித்திட்டத்தைச் சேர்ந்த ஆசிரிய பயிற்சியாளர்களுடன் சேர்ந்து, பாக்கிஸ்தானிலிருக்கும் ஆப்கானிஸ்தான் அகதிச் சிறுமிகளுக்கான பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சியை வடிவமைத்தார். இப் பயிற்சியானது பொசிற்றிவ் டீவியன்ஸ் மொடல் (ிழளவைஎைந னநஎயைெந அழனநட) என்ற முறையைத் தழுவி ஆசிரியர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் மாணவர்களுக்கும் மனவடு மற்றும் மன நெருக்கடியிலிருந்து விடுபடுவதை நோக்காகக் கொண்டது. இந்த முறையானது உள்நாட்டு நிலைகள் அவ்வாறே இருந்ததாலும் அவை இனம் காணப்படாதவாறு இருக்குமாறு வைத்துக்கொள்கிறது. பயிற்சியின் 4 பகுதிகள் மிகவும் பயனுள்ளனவாக ஆசிரியர்கள் கூறினார்கள் 1. மக்களின் மீழ்தகவை ஆராய்தல் 2. நோக்கு 3. சாதாரணம் (ழெசஅயட)என்பது என்ன மற்றும் 4. கொடைகளின் சமனிலை என்பன. திட்டம் வெற்றிகரமானதாக அடையாளம் காணப்பட்டு ஆப்கானிஸ்தானில் உபயோகிப்பதற்கு என தெரியப்பட்டது.

**முக்கிய சொற்கள்:** ஆப்கானிஸ்தான், ஆப்கானிய அகதிகள், உளசமூக நன்னிலை, நோக்கு, ஆசிரியர்கள், positive deviance

---

**பயங்கரவாதம் மற்றும் வேறு வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாடசாலையில் நடைபெற்ற உளசமூக வேலை**

*Tamara V. Takhokhova & Tatyana L. Chshieva*

றஷியாவின் வடக்கு ஒஸ்எட்யா பகுதியிலிருக்கும் பாடசாலைகளில் கிடைத்த உளசமூக உதவிகளை வலுவூட்டுவதற்கு உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனத்தின் முயற்சிகளை இக் கட்டுரை விளக்குகிறது. றஷ்யாவின் சமஷ்டிக் குடியரசின் இந்த அரை சுய ஆட்சிக் குடியரசானது பயங்கரவாதத்தாலும் பெருகி வந்த உள்நாட்டு இடம்பொயர்வுகளாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டது. செயற்திட்டமானது பிள்ளைகள், குடும்பங்கள், பாதுகாவலர்களின் மனநலத் தேவைகளுக்கு முகம் கொடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டது.

**முக்கிய சொற்கள்:** பாடசாலை மட்ட இடை-யீடுகள், பயங்கரவாதம், ஆசிரியர்கள், பெஸ்லான், வடக்கு ஒஸ்ஏஸியா

---

**றியோ டீ ஜெனிரோவின் வன்முறை நிறைந்த சேரிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களிற்கான பிரச்சினைகளுக்க முகம்கொடுக்கு உபாயங்கள் அடங்கிய பயிற்சியின் வடிவமைப்பு**

*Anne van den Ouwelant*

றியோ டீ ஜெனிரோவின் சேரிகளில் வாழும் மக்கள் அடிக்கடி போதைப்பொருள் தொடர்பான வனமுறையில் அகப்படுகிறார்கள். இச் சிறுவர்களுடன் வேலைசெய்யும் உள்நாட்டு ஆசிரியர்களும் இப் பிரச்சினைகளை



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

அனுபவித்து வந்தனர். இப் பகுதி மக்களின் நிலைப்பாட்டை இவர்கள் நன்கு அறிந்திருந்தாலும் இப் பிரச்சினைகளினால் மற்றவர்களுக்கு உதவும் நிலையை விடுத்து தமக்கு உதவி தேவைப்படும் நிலைக்கு ஆளாகிறார்கள். தமது பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கும் தாம் வேலை செய்யும் சமூகத்தவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உதவும் வகையிலும் அவர்கள் இயலுமையை விருத்தி செய்வதற்கு ஒரு அரச சார்பற்ற நிறுவனம் பயிற்சி ஒன்றை வடிவமைத்தத.

**முக்கிய சொற்கள்:** உள்நாட்டு சமூக ஆசிரியர்கள், மனவடு அனுபவம், பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் உபாயங்கள், றியோ டீ ஜெனிரோ வின் சேரிகள், பயிற்சி

---

**2012 மாலி நெருக்கடியின் நடுப்பகுதியில் உளசமூக உதவி: தற்போதய நிலையின் சுருக்கமான மேற்பார்வை**

***Diarra Sekou, Dembele Alou, Diarra Tiecoro, Keita Fatoumata, Pehe Celine, Virginia Perez, Sow Boubacary, Sow Daouda, Traore Bedo, Traore Yaya & Emmanuel Streel***

மாலியின் ஜனாதிபதியை 2012 இராணுவத்தினர் பதவி விலக்கியவுடன் புரட்சியாளர்கள் வடக்கு பகுதியைக் கைப்பற்றி சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தினர். வடக்கில் நிலவிய ஸ்திரமற்ற தன்மை பெருமளவில் மக்கள் தெற்குப்பகுதிக்கு இடம் பெயர்ந்தனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் சேர்ந்து இந் நெருக்கடி நிலைக்கு முகம்கொடுக்கவென ஒருங்கிணைந்த ஒரு உளசமூகப் பதிலளிப்பை வடிவமைத்தன. 2012 ஜூன் மாத்திலிருந்து மாலியைச் சேர்ந்த உளசமூகப் பணியாளர்கள் குழு ஒன்று உடனடிப் பதிலளிப்புகளைத் திட்டமிடவென தொடர்ந்தும் சந்தித்து வருகின்றனர். ஒரு உளசமூகச் செயற்குழுவை இவர்கள் நிறுவியுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் செயற்பாடுகளைத் திட்டமிடல், அவற்றை அட்டவணைப்படுத்தல், ஏனைய உதவியாளர்களின் இயலுமையை விருத்திசெய்தல் போன்ற செயற்பாடுகளையம் மேற்கொண்டனர். மாலியின் தற்போதய நிலையில் உள்நாட்டில் கிடைக்கும் ஆளணி மற்றும் தகமைகளை முக்கியப்படுத்தி உளசமூகத் திட்டங்கள், மனநல சேவைகளை வடிவமைத்தல் என்பவற்றின் முக்கியத்துவத்தை இக் கட்டுரை விபரிக்கிறது.

**முக்கிய சொற்கள்:** மாலியில் உளசமூக உதவி, ஒருங்கிணைப்பு, உள்நாட்டு திறமைகள்

---

**கொங்கோவிலிருந்து தன்சானியாவிற்கு வந்த அகதிகள் பணியாளரின் கதை**

***Feza Irene Penge***

இப் பெண் எழுத்தாளர் கொங்கோ நாட்டில் விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளைக் கற்பிப்பதற்கான பயிற்சிகளைப் பெற்றவர். தனது நாட்டின் வன்முறைகள் காரணமாகத் தான் எவ்வாறு தன்சானியாவிற்கு வந்தார் என்று இக் கட்டுரையில் கூறுகிறார். தான் பட்ட துன்பங்கள், தனது பிள்ளைகள் இறந்துபோனது, பாலியல் வன்முறை போன்றன அடங்கலாக, அனைத்தையும் விபரிக்கிறார். நயறுகுசு என்ற அகதிகள் முகாமில் ஒரு உளசமூகப் பணியாளராகிய அவர் தமது சமூகத்தில் சேவை செய்வதன் வலிமையை உணர்ந்துகொண்டார். அண்மையில் ஐக்கிய இராட்சியத்தில் சென்று வசிக்கும் இவர் தனது தாய் நாட்டில் தனது அனுபவங்கள் பயனளிக்கும் என நினைக்கிறார்.

**முக்கிய சொற்கள்:** கொங்கோ குடியரசு, தன்சானியா, விசேட தேவையுள்ள பிள்ளைகள், அகதிகள்

---

**கவலை பலமாக மாறியது: பக்தாத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுடன் வேலை செய்யும் ஈராக்கிப் பெண்ணின் கதை**

***Sabah Dhia Jaafar***

2006 ம் ஆண்டு தனத ஆங்கில முதுமானிப் பட்டத்திற்காகக் கற்றுக்கொண்டிருந்தார் கட்டுரையாசிரியர். அந்த வருடம் தனது கணவருடன் கடத்தப்பட்டார். எட்டு நாட்களுக்குப்பின் இவர் விடுதலைசெய்யப்பட்டாலும் கணவர்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

கொலைசெய்யப்பட்டார். இக் கட்டுரையில் தனது ஆழ்ந்த துயரத்தையும் IOM நிறுவனத்தில் இணைந்து வேலை செய்த போது மீண்டும் தனது வாழ்க்கையில் ஓர் அர்த்தம் ஏற்பட்டதையும் விபரிக்கிறார். இந்த அரச சார்பற்ற நிறுவனம் ஏனைய ஈராக்கியப் பெண்களுக்கு உதவும் வாய்ப்பை இவருக்குக் கொடுத்தது. இப்பொழுது பெண்கள் மற்றும் இளையவர்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான செயற்திட்ட ஒருங்கிணைப்பாளராக இருக்கும் இவர் உணர்வு ரீதியான மற்றும் நடைமறைக்குச் சாத்தியமான ஆதரவினை மற்றவர்களுக்குக் கொடுக்கிறார்.

**முக்கிய சொற்கள்:** ஈராக், வேற்றுமை வன்முறை, பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள்

---

**சோமாலிய தேசத்தில் மனநல சேவைகளை நிறுவிய இளைய வைத்தியரின் அனுபவம்**

***Jibril Handuleh***

சிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சோமாலிய தேசத்தைச் சேர்ந்த இளைய வைத்தியரான இக் கட்டுரையாசிரியர் தனது அனுபவங்களைக் கூறுகிறார். மருத்துவம் கற்ற அவர் மனநல பராமரிப்பில் ஆர்வம் கொண்டார். ஆபிரிக்காவில் இத் துறை புறக்கணிக்கப்பட்ட துறையாகும். ஐரோப்பிய உளவியலாளர்களின் உதவியுடன் கட்டுரையாளர் உளவியல் கற்கை நெறி ஒன்றை நிறுவினார். தனது ஊரான பொராமாவில் மனநல பராமரிப்பு சேவையையும் ஆரம்பித்தார். சில வருடங்களில் உள் நோயாளி மற்றும் வெளி நோயாளர் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. சமூக மட்ட மனநல சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இவரது வெற்றிக்குக் காரணம் சமூகத்தடனான கூட்டணியும் சமூக ஒத்துழைப்புமாகும். பாரம்பரிய வைத்தியர்களுடன் சேர்ந்து தொழிற்பட்டாலும் அவர்களின் பங்கு பற்றி குறைந்த ஊக்கத்தையே காட்டுகிறார்.

**முக்கிய சொற்கள்:** மனநலன், உளவியல் கற்கை, சேவை அபிவிருத்தி, சமூக பங்களிப்பு, சோமாலிய தேசம



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.